# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2021.02.01 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# விவாக (பொது) (திருத்தம்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

***1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விவாக (பொது) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *6.00***　　**தபாற் செலவு : ரூபா *15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## விவாக (பொது) (திருத்தம்)

### 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விவாக (பொது) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, விவாக (பொது) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையைத் திருத்துதல்.*

**2**. முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரை இத்தால் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது. முன்னுரையில் “முஸ்லிம்களின் விவாகம் தவிர்ந்த” என்ற பதம் அகற்றப்படுவதாகுக.

*நீக்கமும் பேணல்களும்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளில் ஏதேனும் ஒன்றிற்கோ அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கோ பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், விவாக (பொது) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.